# கவிழ்ந்த காணிக்கை

## 1

பூமி என்பவள் தாய், பூமி என்பது பெண். மண்தான் பூமியின் உடல் என்றால் பாறைகள் பூமித்தாயின் எலும்புகள். நீர் பூமித்தாயின் ரத்தம். பூமியின் அடியிலிருக்கும் எண்ணைகள் பூமித்தாய் கொழுப்பு. இந்த பாறைஎலும்புகள் இல்லையெனில் பூமித்தாயின் காற்றின் வேகம் தாங்காமல் பிரபஞ்சத்தில் சிதறிப் போயிருப்பாள். இந்தப் பாறைகள்தான் பூமியை இறுகப்பிடித்து ஒரு வடிவமாய் வைத்திருக்கின்றன. மண்ணை இழுத்துப் பற்றிக்கொண்டிருக்கின்றன. மண் தன்னை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்றுதான் இத்தனை சலசலப்போடும்' நெளிவு சுளிவுகளோடும் இருக்கின்றன. பூமிக்கு அடியேயுள்ள பாறைகளை மனிதன் இப்படி நோண்டிக் கொண்டே போனால், ஒரு நாள் இல்லையெனில் ஒரு நாள் பூமி 'பொலபொல'வென்று உதிர்ந்து பிரபஞ்சத்தில் காணாமல் போய்விடும்.

ஆதிச்ச பெருந்தச்சன் கவலையோடு பாறைகள் நோண்டப்படுவதை வேடிக்கை பார்த்தார். அந்தப் பாறைகள் மண்ணில் எப்படி கிளைவிட்டுப் போகிறதோ அதேவிதமாக மண்ணை நோண்டிக் கொண்டு போனார்கள். அப்படி போகிற போது. அந்தப்பாறை பெரிய

சிவலிங்கம் போல், இயற்கையாகவே அமைந்த லிங்கம் போல் மிகப் பெரிதாய் கிடப்பதை உணர முடிந்தது.

"ஐயா, செதுக்கப்பட்ட லிங்கம் போல எவ்வளவு வழவழப்பாக இருக்கிறது பார்த்தீர்களா? ஆவுடையாரோடு கூடிய லிங்கமாய் இருக்கிறது. இதை இப்படியே இழுக்க முடியாதா..." ஓடிவந்து ஆலோசனை கேட்டார்கள். அருகிலுள்ள குட்டையிலிருந்து குடம் குடமாய் ஜலம் கொண்டு வந்து பாறை இடுக்குகளில் ஊற்றினார்கள். பாறையில் நீண்ட இரும்பாணி பொருத்தி வேகமாய் அடிக்கத் துவங்கினார்கள்.

பாறையின் அடியில் இருபத்தேழு துளைகள் போடப்பட்டிருந்தன. நடுத்துளையில் இரும்பாணியை வைத்து வேகமாய் சம்மட்டியால் இரண்டு பேர் மாறி மாறி அடிக்க அந்த அடி தாங்காமல் பாறை விரிசல் விழும். விரிசல் விழும்போது எங்கே ஓட்டை போட்டிருக்கிறார்களோ அந்த இடத்தில் எளிதாய் பிளந்து கொள்ளும். பிறகு யானை கட்டி பாறையை மண்ணில் இருந்து இழுத்து விடலாம்.

இந்தத் தடவை அடிக்கும்போது சத்தம் வேறு விதமாய்க் கேட்டது. எல்லோரும் 'ஹோ' வென்று கத்தினார்கள். அந்தச் சத்தம் எல்லோருக்கும் பழக்கமான ஒன்று. பாறை விரிசல் விட்டால் அப்படி ஒரு விநோதமான சத்தம் கேட்கும். பாறை சற்று அசைந்து கீழே நகர்ந்து உட்கார்ந்தது. அப்படி உட்கார, அதன் பல பக்கங்களில் உள்ள மண் பிடிமானங்கள் விடுபட்டன. இரண்டு, மூன்று இடங்களில் ஆதிச்ச பெருந்தச்சனின் உதவியாளர் சுட்டிக்காட்ட அங்கும் ஆணி அடித்து இரும்பு வளையங்களை மாட்டினார்கள் கயிறு கொண்டு வந்து இரும்பு வளையங்களில் சுருக்கு போட்டார்கள். நீண்ட கயிறை இழுத்து யானையின் முதுகில்கட்டினார்கள். ஒருயானை போதாது



என்று ஆமோதித்து மேலும் கயிறுகள் போட்டு இன்னொரு யானையையும் கட்டினார்கள்.

யானைகள் நகரத் துவங்கின. கயிறுகள் விறைப்பாயின யானைகள் கயிறு விறைப் பாகும் வரை நன்கு இழுத்தன. கயிறு விறைப்பானபின் இழுக்க முடியாமல் திணறின. முக்கி, முன்னேற முயற்சித்தன. முழுபலத்தோடு பாறாங்கல்லை இழுத்தன. பாறாங்கல் பளிச்சென்று நகர்ந்து மண்விட்டு வெளியே வந்தது. லேசான சிகப்போடும், கறுப்போடும் மிகப் பெரிய கல் மண்ணைவிட்டு வெளியே வந்தது.

இந்தப் பாறையை இனி கட்டை கொடுத்து மேலே தூக்கி சமதளத்தில் இழுத்துப் போய்விடலாம். போய் பதினாறு சக்கரமாட்டுவண்டியில் சாய்த்து காளைகள் பூட்டி ஊருக்குள் இழுத்துப் போகலாம்.

ஆதிச்ச பெருந்தச்சன் அருகே போய் சிறிய சுத்தியால் கல்லைத்தட்டிப் பார்த்தார். நாதம் மிகச்சரியாக இருந்தது. ஐம்பொன்னைத் தட்டுவதுபோல் இனிமையான சப்தம் எழுந்தது, ஆனால் நினைத்ததுபோல் கல் முழுமையானது அல்ல. இந்தப்பக்கம் லிங்க வடிவமாக இருக்கிறதே தவிர, பின்பக்கம் அவ்வளவு வளைவு இல்லை. இது கல்லிங்கம் செய்ய உபயோகப்படாது. ஒருவேளை நந்தி செய்யலாம். மறுபடியும் சுத்தியால் அடித்த வண்ணமே சுத்திவந்தார், 'மேலேற்றுங்கள்' என்று கட்டளையிட்டார்.

மூன்று நாட்களில் வீட்டுக் கொல்லைப் புறத்தில் ஒன்றரை ஆள் உயரமும், இரண்டு ஆள் அகலமும் உள்ள கனத்த பாறை படுத்துக்கிடந்தது. அவர் பிள்ளை சோமதேவன் உச்சியில் ஏறி நின்று கையிலுள்ள மூங்கிலால் உலகத்தை சுட்டிக்காட்டி கொண்டிருந்தான் இடுப்பில் துண்டு போட்டு இறுக்கி தலையில் பனை ஓலையில் செய்த கிரீடம் அணிந்திருந்தான், காதுகளிலும் ஓலைச்

சொருகுகள் இருந்தன. புஜங்களிலும், கைகளிலும் அதே பனைஓலையை சாயம்பூசி தங்க ஆபரணம்போல் அணிந்திருந்தான், 'யாரங்கே?' அரசர்போல் வெட்டவெளியைப் பார்த்துக் கூப்பிட்டான். 'சற்று உயரம் ஏறியதும். எல்லாம் அணிந்திருக்கும் அரசன் என்ற எண்ணம், ஆளுமை செய்யவேண்டும் என்கிற ஆசை வந்துவிடுகிறது. யாரும் சொல்லிக் கொடுக்காமலேயே மனிதர்கள் ஆளுமை செய்ய ஆசைப்படுகிறார்கள்.' என்று ஆதிச்சபெருதச்சன் நினைத்துக் கொண்டான்.

''அடேய்...விழுந்து விடப்போகிறாய். இறங்கி வா'' என்று கூப்பிட்டார்.

பையன் அங்கிருந்து பாய்ந்து தரையில் குதித்தான். அப்பாவை நோக்கி ஓடிவந்தான். ''எனக்கு எப்போது சொல்லித் தரப்போகிறீர்கள்?'' என்று ஆவலோடு கேட்டான்.

குழந்தை சோமதேவனுக்கு வித்யாப்பியாசம் ஆரம்பிக்க வேண்டும். வரும் விஜயதசமியில் செய்வதா. அல்லது அதற்குமுன்பே நாள்பார்த்துச் செய்வதா என்று யோசிக்க வேண்டும், குழந்தையின் அங்க லட்சணங்கள் மிக அழகாக இருந்தன. குழந்தை பிறந்தபோதே இடக்கை மூடி வலக்கை விரித்து அழுதது.

''பாருங்கள். உங்கள் மகன் இடக்கையில் உளி பிடித்துக்கொண்டு, வலக்கையில் சுத்தி வைத்துக் கொண்டிருக்கிறான். உளி பிடித்தவண்ணம் பிறந்திருக்கிறான் பாருங்கள். இவன் பெருந்தச்சன். பெருந்தச்சன்'' என்று வந்தவர்கள் பாராட்டினார்கள், உறவினர்கள் கொண்டாடினார்கள். சோமதேவன் காலுக்கு முத்தம் கொடுத்து விட்டுப்போனார்கள்.

'அடேய் ஆதி, உன் பையன் ஜாதகம் மிக நன்றாக இருக்கிறது. இவ்வளவு உயர்வான ஜாதகம் நம் குடும்பத்தில் எவருக்கும் இருந்ததில்லை. உன் மதிப்பும், குடும்ப மரியாதையும், நம் குல கவுரவமும் இவனால் மிகவும் உயரப் போகின்றன. இவன் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பிறக்கும் பிள்ளை'' என்று அப்பா குதூகலமாய்ச் சொன்னார். ''எவ்வளவு சீக்கிரம் குழந்தைக்குப் பாடம் சொல்லித் தரமுடியுமோ, அவ்வளவு சீக்கிரம் சொல்லித் தருவது நல்லது'' என்று அவசரப்பட்டார்.



ஆனால் வீட்டுப்பெண்கள் உடனடியாக வித்யாப்பியாசம் ஆரம்பிப்பதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. தாய் மறுக்கிறபோது ஆரப்பித்துவிடமுடியாது.

''ஏழு வயதுவரை அவன் சுதந்திரமாக வளரட்டும். நீங்கள் வேலை கற்றுக்கொடுக்கிறேன் என்று அழைத்துப் போனால், நிச்சயமாகத் தலையில் தட்டுவீர்கள். முதுகில் அறைவீர்கள். கன்னத்தைக் கிள்ளுவீர்கள். குழந்தை ஒரு நாளைப்போல் எல்லா நாளும் அழுதுகொண்டே வருவான். எதற்காக இந்த அவஸ்தை? இன்று இல்லை என்றால், என்றாவது ஒருநாள் அந்த அவஸ்தையை அவன்பட்டுத்தானே ஆகவேண்டும், அதை ஏழு வயதுக்குப் பிறகு பட்டுக்கொள்ளட்டும் ஏழு வயதுவரை அவன் வெறும் கன்றுக்குட்டியாய் காளைக்கன்றாய் இந்த ஊரைச்சுற்றி வரட்டும்'' என்று தெரிவித்து விட்டார்கள்.

அவர்கள் பேச்சில் உள்ள நியாயத்தை ஆதிச்ச பெருந்தச்சன் புரிந்துகொண்டு பையனை சுதந்திரமாக வளரவிட்டார்.

ஏழு வயதுப் பிள்ளை பத்து வயது வளர்ச்சியோடு நெகுநெகுவென்று வளர்ந்து நின்றது. 'இந்த வருஷம் எப்படியும் வித்யாப்பியாசம் ஆரம்பித்தே ஆகவேண்டும்' என்று அவருக்குப் புரிந்துபோயிற்று. மகனை அணைத்து கொஞ்சிக் கொண்டிருக்கும் போதே இரண்டு சோழ வீரர்கள் ஊருக்குள் நுழைந்து சிரமபரிகாரம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்

தது. அதிகாரிகள்போல் இல்லையாயினும் கையில் ஓலை கள் வைத்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் தலைப்பாகையும், மேல்துண்டுமாய் காலில் செருப்பணிந்து ஊர் சபை நோக்கிப்போனார். அவருக்கு முன்னால் அங்கே பலபேர் கூடியிருந்தார்கள், இவர் அங்கே போனதும் சோழவீரர்கள் எழுந்து நின்று கை கூப்பினார்கள். இடுப்பிலிருந்த ஓலையை எடுத்துக் கொடுத்தார்கள். படித்தவுடன் பெருந்தச்சன் பரவச மானார். 'இறைவா' என்று கைகூப்பினார். என்ன? என்ன?' கூட்டம் ஆவலாகக் கேட்டது.

''நமது ஊருக்கு இன்னும் மூன்று நாட்களில் மன்னர் வருகிறார். தஞ்சையை விட்டுக் கிளம்பிவிட்டார்.''

''உடையார் ஸ்ரீ இராஜராஜத் தேவர் வாழ்க'' என்று உரக்கக் கூவினார், நடனமாடினார்கள். மேல் ஜனங்கள் துண்டுகளை வீசியெறிந்து சந்தோஷப்பட்டார்கள். ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக்கொண்டனர். இராஜ ராஜனின் பெயரைக் கேட்டதுமே மக்கள் வெறிபிடித்து சந்தோஷமாகி விடுகிறார்கள் என்பது எல்லோருக்கும் புரிந்தது.

'எல்லாம் கிடக்க, உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவர் இந்தப்பாறைக் கொல்லைக்கு ஏன் வருகிறார். அதுவும் இந்த மழைநாளில் எதற்கு இந்தப்பக்கம் வரவேண்டும்? புரட்டிப்போட்ட பாறைகளிலிருந்து பாம்புகள் முன்னும் பின்னும் அலைந்துகொண்டே இருக்கின்றன. பல இடங் களில் பாறையில் நீர் நிறைந்துள்ளது. கணுக்காலளவு சேறு இருக்கிறது. பெரிய தேர்கள் ஆறு தாண்டி வர முடியாது, ஆற்றில் அந்தப் பாதையில் நடந்து நடந்து மணல் நொய்நொய்யாக இருக்கிறது. நமது வண்டியில் போனாலே இருபது பேர் நெம்பித்தள்ளி கரையேற்ற வேண்டியிருக்கிறது. அரசர் என்றால் வெறுமே வரு



வாரா, நூறு. நூற்றைம்பது போர் வீரர்களாவதுகூட வரமாட்டார்களா...நாம் நினைப்பது எந்த மூலைக்கு...? ஆயிரம் பேராவது வருவார்கள். அத்தனை பேருக்கும் சோறுபோட வேண்டுமே என்ன 'செய்வது' ஆதிச்ச பெருந்தச்சன் யோசித்தார்.

''ஏனப்பா...சொல்லுங்கள். அரசரோடு எத்தனை பேர் வருகிறார்கள்'' போர் வீரர்களைப் பார்த்துக் கேட்டார்.

''எங்களுக்கு அந்தத்தகவல் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் அரசரோடு இப்போதைக்கு எழுபது குதிரை வீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சோழத்தரம் என்ற கிராமத்தில் தங்கியிருக்கிறார்கள். சோழத்தரத்தில் பாடிவீடு இருப்பதால் அங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட போர்வீரர்கள் தங்கியிருக்கிறார்கள். அந்த ஆயிரம் வீரர் களும் ஒருவேளை திருவக்கரை நோக்கி வந்தாலும் வரலாம். அரசரோடு எத்தனை பேர் வருவார்கள் என்று சொல்வதற்கில்லை.''

''விருந்தினர்கள் எத்தனை பேர் வருவார்கள் என்று கேட்கமுடியுமா...நாம்தான் தயாராக இருக்கவேண்டும். அவரவர் வீட்டின் நெல்லை கொண்டுவந்து கோயிலில் கொட்டுங்கள், அளந்துபோட்டு விட்டு, ஓலை வாங்கிக் கொண்டு போங்கள், அரசர் போனதும் அதற்குண்டான விலையோ, நெல்லோ திரும்பக் கொடுத்துவிடலாம். ஆயிரம் பேருக்கு உணவு தயாராக இருக்கவேண்டும் என்றால் நெல்லை இப்போதே வேக வைத்து குத்தி அரிசியாக்கினால்தான் முடியும். பெண்கள் இந்த வேலைக்கு தயாராக இருக்கட்டும்'' ஆதிச்ச பெருந்தச்சன் உத்தரவிட்டார்.

இன்னொரு குதிரைவீரன் வந்திருப்பதாக கிராமத்து எல்லையிலிருந்து இளைஞர்கள் ஓடிவந்தார்கள். அந்த

இளைஞர்களைத் தாண்டி ஒரு குதிரை ஓடி வந்தது. அதிலிருந்து மத்திமவயது அதிகாரி ஒருவர் கீழிறங்கி னார். கேட்டார்.

''ஆதிச்ச பெருந்தச்சன் யார்?''

''ஐயா நான்தான்''—அவர் எழுந்து கைகூப்பினார்.

''உங்களைப்பார்க்க, உங்களைத் தேடித்தான் அரசர் வருகிறார். வெறுமே அரசரது வருகை மட்டுமே ஓலையில் செய்தியாகத் தரப்பட்டது. அப்படி தந்தி ருக்க வேண்டாம் என்று அரசர் அபிப்ராயப்படுகிறார். உங்களைச் சந்திக்க அரசரும், அவரது ஆட்கள் நான்கு பேரும் வருகிறார்கள். எனவே கோலாகலமான விழாக் கள் எதையும் ஆதிச்சபெருந்தச்சன் செய்துவிடவேண்டா மென்றும்,உணவு ஏற்பாடுகள் செய்து தவிக்கவேண்டாம் என்றும் அரசர் கட்டளையிட்டிருக்கிறார். அரசர் உங்க ளோடு இரண்டுநாட்கள் தங்குவார், உங்களிடம் நிறைய பேசுவார். இதைச்சொல்லி வரவேண்டுமென்பது எனக்கு இடப்பட்ட கட்டளை. நான் திரும்பிச்சென்று அரசரை எதிர்கொண்டு அரசரோடு மறுபடியும் வருவேன்.''

வந்த அதிகாரி ஒரு சொம்பு மோர் குடித்து வெற் றிலை பாக்கு போட்டுக் கொண்டு குதிரையேறித் திரும் பவும் பயணமாகிவிட்டார்.

**ஊ**ர் சுத்தமாக்கப்பட்டது. எல்லாவீட்டு வாசலிலும் நீர் தெளிக்கப்பட்டு கோலங்கள் போடப்பட்டன. வழி யில் முளைத்திருந்த சிறு சிறு பாறாங்கற்களைத் தட்டி உள்ளே அனுப்பினார்கள். அரசர் வருகின்ற காலை வேளைக்காக இரவெல்லாம் விழித்திருந்து ஜனங்கள் காத் திருந்தனர். வீட்டு வாசலில் தோரணம் கட்டி அழகு படுத்தினார்கள். எக்காளங்களை துடைத்து வைத்துக் கொண்டார்கள். பறைகளை சூடுகாட்டி இறுக்கினார் கள்.



விடிந்து நல்ல சூரியோதயத்தின்போது, அரசர் உள்ளே நுழைய ஊர் வாத்திய சத்தங்களால் அதிர்ந்தது, மக்கள் பரவசத்தோடு அரசரின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டார்கள். மத்திம வயதை அடைந்த அரசர் புன் முறுவலோடும் நிதானத்துடன் ஜனங்களை ஊடுருவிப் பார்த்துக் கொண்டே வந்தார். குதிரையை விட்டு கீழி றங்கினார். பெருந்தச்சன் பூரண கும்பத்தோடு நிற்ப தைப் பார்த்து அவருக்கு அருகே போய் பூரண கும்பத் தைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார். ஏற்றுக் கொண்டதாய் அறிவித்தார். அரசரின்காலில் ஆதிச்ச பெருந்தச்சன் விழப்போனபோது தடுத்து நிறுத்தி, ''வய தானவர்கள் என்னை வணங்குவதில் எனக்கு விருப்ப மில்லை. கைகூப்பி கும்பிட்டால் போதும்'' என்று தோள் பற்றிக் கொண்டார்.

''எப்படி இருக்கிறது வாழ்க்கை'' என்று பொதுவா கக் கேட்டார். ஜனங்கள் ஆரவாரமாய் 'மிக சந்தோஷ மாய் இருக்கிறது' என்று சொன்னார்கள். அரசர் முக மும், மனதும் மலர்ந்திருப்பதை ஆதிச்ச பெருந்தச்சன் உணர்ந்துகொண்டார்.

வெல்லப் பணியாரமும், எலுமிச்சம் பழ சாதமும் சூடான பானகமும் அரசருக்குத் தரப்பட்டன. மிக அருமை, மிக அருமை என்று அரசர் விருந்தெடுத்துக் கொண்டார். பிறகு குதிரையேறினார். மற்றவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டு, அரசரும் அவரோடு வந்த இரண்டு ஆட்களும் ஆதிச்ச பெருந்தச்சனும் பாறைக் கொல்லையை நோக்கி குதிரையில் போனார்கள்,

''அரசர் கோயில் கட்டப்போகிறாராம்; மிகப் பெரிய கோயிலாம். கற்பனைக்கு எட்டாத ஒரு உயரமாம், கிட்டத்தட்ட நான்கு பனை உயரத் துக்கும் அதிகமாக இருக்குமாம். இருக்கவேண்டும் என்று விரும்புகிறாராம். அதேபோல் இறைவன் திரு உருவமும்

சிவலிங்க ஸ்தாபனமும் இதுவரை இல்லாததாக இருக்க வேண்டும். அவ்வளவு பெரிய பாறைகள் கிடைக்குமா? லிங்கம் துண்டு துண்டாய் வெட்டி ஒட்டி செய்ய முடியாது, ஒரே கல்லாய் இருக்க வேண்டும், ஒரே கல்லில் பெரிய ஆவுடையார், ஒரேகல்லில் பெரிய லிங்கம் செய்ய முடியுமா...அவ்வளவு அகலமான உறுதியான பாறைகள் திருவக்கரையில் உண்டா?'' அரசரோடு வந்த ஆட்களில் ஒருவர் கேட்டார்.

''நிச்சயம் உண்டு. திருவக்கரையில் கிடைப்பது போன்ற பாறைகள் உலகத்தில் வேறு எங்கும் கிடைக்காது. மிக உயர்ந்த தரமான கருங்கற்கள், பச்சையேறிய கற்கள், சிகப்பேறிய கற்கள், பழுப்பேறிய கற்கள் மிக அகலமாய், மிக உயரமாய்க் கிடைக்கும். மூன்று ஆள் உயரத்திற்கு இரண்டு ஆள் அகலத்திற்கு பெரும் பெரும் பலகைகளாகவும் பாறைகள் கிடைக்கும்.''

பெருந்தச்சன் பதில் கூற, பேசிக் கொண்டே அவர்கள் பாறைக் கொல்லையை அடைந்தனர். யானைகட்டி மண்ணிலிருந்து பாறை இழுத்த இடத்தை ஆதிச்ச பெருந்தச்சன் இராஜராஜ சோழனுக்குக் காண்பித்தார்.

''அடேயப்பா, நான் நினைத்ததைவிட மிகப் பெரிய புதையலாக இருக்கிறதே...'' அரசர் பரவசப்பட்டார்.

''என் பிரச்சினைகள் பெரிதும் தீர்ந்தது. திருவக்கரையிலிருந்து தஞ்சைக்குப் போகின்ற பிரயாணம்தான் கடினமாக இருக்குமென்று நினைக்கிறேன், பெரும் பாறைக் கற்களோடு பதினான்கு சக்கரங்கள் பொருந்திய ரத வண்டியில் பாறைகள் வரவேண்டுமென்றால் பாதை இன்னும் உறுதியாக இருக்க வேண்டும்.

ஆதிச்ச பெருந்தச்சரே, நீங்கள் சிவலிங்கத்தையும் அதற்கு இணையான நந்தியையும் தயவு செய்து செய்யத் துவங்குங்கள். நான் பாதையை செப்பனிட்டுக் கொள்கி



றேன். தஞ்சையிலிருந்து ஆஸ்தான பெருந்தச்சர்களை அழைத்து வந்து தூண்களுக்கான பாறையை எடுத்துப் போகச் சொல்கிறேன்.

# 2

மண்டபம் மூடுவதற்கான தட்டைப் பலகைகளையும் தேர்ந்தெடுக்கச் சொல்கிறேன். பிரதான தச்சர்களை வரவழைத்து சிலைகளுக்கான கற்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு போகச் சொல்கிறேன். நீங்கள் ரகசிய பெருந்தச்சர். கருவறைக்கான வேலைகளை நல்லநாள் பார்த்து துவங்கிவிடுங்கள். கல் தேர்ந்தெடுத்து, இழுத்து பூஜை போட்டு வேலை துவங்குங்கள். உங்களுடைய வேலை இரண்டுதான். ஒன்று மிகப்பெரிய சிவலிங்கம். ஆவுடையாருடன் கூடியது தயார் செய்ய வேண்டும். அதற்கு இணையாய் ஒன்றரை ஆள் உயரத்தில் நந்தி எம் பெருமானார் சிலையையும் செய்ய வேண்டும்.

ஆதிச்ச பெருந்தச்சரே! இதற்கு என்ன சன்மானம் வேண்டுமென்று ஓலையில் எழுதிக்கொடுங்கள். அந்த சன்மானம் உங்கள் வீடு தேடிவரும். எத்தனை ஆட்கள் இதற்குத் தேவையோ அத்தனை பேரை நீங்கள் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இந்த வேலை செய்வதற்கு இந்த திருவகரை கிராமத்திற்கு என்ன உதவிகள் வேண்டுமோ அவை உடனடியாக செய்யப்படும். சுமப்பதற்கு யானைகளோ, குதிரைகளோ, சக்கரம் வைத்த மிகப் பெரிய மாட்டு வண்டிகளோ உடனடியாகத் தரப்படும்.''

அரசர் இரண்டுநாள் தங்கினார். ஒருநாளைக்குமூன்று மணி நேரமே தூங்கினார்கள். தூங்கும்போது நம்பிக்கை

யானமூன்றுபேரைவிசிறச்சொன்னார். அதைத்தவிர, மற்ற நேரமெல்லாம் திருவக்கரை பாறைக்கொல்லையில்விபரங்கள் கேட்டு அலைந்து கொண்டிருந்தார். அவர் சுறுசுறுப்பு ஊரை வியக்க வைத்தது. அவரைப் போல சுறுசுறுப்பாக இருக்க வேண்டுமென்று இளைஞர்கள் ஆசைப்பட்டார்கள். அரசர் இரண்டு நாள் தங்கிப் பின் குதிரையேறிப் போனதும் ஊர் வெறிச்சோடிப் போயிற்று.

அன்று இரவு பெருந்தச்சனின் மனைவி உணவுக்குப் பிறகு புருஷனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

மூன்றுஆள் உயரத்திற்கு சிவலிங்கசொரூபம். இரண்டு ஆள் உயரத்திற்கு நந்தி எம்பெருமானார்'' பெருந்தச்சன் சொன்னார்.

''அப்படியானால் கோவில் எவ்வளவு பெரியது'' என்று வியந்தாள். ''இப்படி ஏன் கட்டவேண்டும் என்று தோன்றியது'' என்று ஆச்சரியப்பட்டாள்.

''ஐயா உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா... குழந்தை ஆணாகப் பிறந்தால் சிவனுக்கு வாகனம் செய்வதாக வேண்டியிருக்கிறீர்கள். ஏதேனும் கோவிலுக்கு நந்தி அடித்துக் கொடுப்பேன் என்று சத்தியம் செய்திருக்கிறீர்கள். இந்தக் கோயிலுக்கு உங்கள் காணிக்கையைச் செய்துவிடுங்களேன்'' என்று ஞாபகப்படுத்தினாள்.

''நல்லது. அப்படியே செய்துவிடலாம்.''

''ஐயா, நந்தியை முதலில் செய்துவிட்டுத்தானே பிறகு சிவலிங்க சொரூபம் செய்யவேண்டும்'' ஒரு மாணவன் கேட்டான்.

''ஆமாம்.''

''ஆனால், மன்னர் கோவில் வேலையை ஆரம்பித்து விட்டாரே''



''அதனால் என்ன...''

''ஐயா. நீங்கள் சொல்கிற உயரத்தில் அகலத்தில் சிவலிங்கம் செய்ய வேண்டுமென்றால் எவ்வளவு பெரிய கருவறை இருக்கவேண்டும்? அந்தக் கருவறைக்குள் சிவலிங்கத்தைக் கொண்டு போவது எங்ஙனம்? என்னுடைய அபிப்ராயப்படி சிவலிங்கத்தை இப்போதே செய்து, கொண்டுபோய் கருவறைக்குள் வைத்து அதை பந்தனம் செய்யாமல் வெறுமே கட்டை கொடுத்து தூக்கி வைத்திருந்து பிறகு கோபுரம் எழுப்பியதும் பந்தனம் பண்ணி விடவேண்டும், இல்லையெனில் இவர் சொல்லுகிற உயரத்தில் அகலத்தில் சிவலிங்கம் உள்ளே போவது கடினம் அதனால்...''

''என்ன சொல்கிறாய்?''

''முதலில் சிவலிங்கம். பிறகு நந்தி அடிக்க வேண்டியிருக்கும்''

''அது தவறாயிற்றே''

''வேறு வழியில்லை.''

''ஐயா. நீங்கள் நந்திக்கு ஒன்றரை வருடம் எடுத்துக் கொண்டால் தஞ்சைக்கோபுரம் மேலெழும்பிவிடும், பிறகு சிவலிங்கம் வேறு ஏதாவது வைத்துவிடுவார்கள். எனவே திருவக்கரைக்கு கிடைத்த அற்புதமான வாய்ப்பை விட்டுவிடக்கூடாது. புதுக்கோட்டையிலிருந்து கற்கள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். பாண்டிய தேசத்தின் எல்லையில் உள்ள மலைகளையும் போய் பரிசோதிக்கிறார்கள். இது தொலைவு என்பதால் மிகக் குறைவான கற்களையே இங்கிருந்து உபயோகப்படுத்துகிறார்கள். அங்கு சிகப்பு கற்கள் இருக்கின்றன. காவி கலந்த அந்தக்கற்கள் செதுக்குவதற்கு இன்னும் எளிமையாக இருக்கின்றன. மென்மையாக இருக்கின்றன.

எனவே. சிற்பிகள் அந்தக் கல்லைத்தான் விரும்புகிறார்கள்.''

மாணவர்கள் தலைக்குத்தலை பேசினார்கள். ஆதிச்ச பெருந்தச்சன் யோசித்தார்.

''வேறு வழியில்லை. ஒரு வருடத்திற்குள் கோவிலின் சுற்றுப்புறக் கருவறைச் சுவர்கள் எழும்பிவிடும், அதற்குள் சிவலிங்கம் செய்தால்தான் உள்ளே கொண்டுபோய் வைப்பதற்கு சரியாக இருக்கும். எனவே, நந்தி எம்பெருமானார் செய்வதற்கு முன்பு சிவலிங்கத்தை செய்துவிட வேண்டும். சிவலிங்கம் ஒருவரும், ஆவுடையார் ஒருவருமாய் பிரித்துக்கொள்ளவேண்டும். இரண்டு கற்கள் தேட வேண்டும்.'' அவர் எழுந்து பாறைக்கொல்லைக்குப் போனார். ஊர் மொத்தமும் கற்கள் தேடியது.

''இது என்ன கூத்து. ஒரு இடத்திற்கு நந்தி வராமல் இறைவன் வருவாரா...? நந்தி தளபதி அல்லவா...காவல் தெய்வம் அல்லவா? நந்தியை முதலில் செய்துவிட்டுத் தானே இறைவனை வரவழைக்க வேண்டும். இறைவனை. வரவழைத்துவிட்டு பிறகு நந்தியை வரவழைப்பது என்றால் இது தவறான விஷயமாக அல்லவா இருக்கிறது? எஜமானருக்குப் பின்னர் வேலைக்காரன் வர வேண்டும்...முன்னே ஓடிவந்தல்லவா நிற்க வேண்டும்'' என்று அம்மா உரத்த குரலில் புலம்பத் துவங்கினாள்.

பெருந்தச்சனின் அம்மா பேசியதை யாரும் காது கொடுத்துக் கேட்கவில்லை. வேலை துரிதமாக நடக்க வேண்டுமென்பதாலும் மிகப்பெரிய திருவக்கரையின் பங்கு இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டதாலும் அவர்கள் வழக்கத்தை மீறி, சிவலிங்கம் செதுக்கக் கல் தேடி, யானை கட்டி இழுத்து செதுக்க ஆரம்பித்தார்கள்.



வேலை துவங்கிய நாளிலிருந்து சோமதேவன் அப்பாவோடேயே சுற்றிச் சுற்றி வந்தான். அவர் சொல்வதையெல்லாம் மனதில் வாங்கிக்கொண்டான். அவனும் நல்ல கல் எது என்று கண்டுபிடிக்கக் கற்றான். அவனும் அப்பாவைப்போல் இடுப்பில் எப்போதும் சிறிய சுத்தி வைத்திருந்தான். காதில் கடுக்கனும், தோளில் துண்டும். காலில் பாத ரட்சையுமாய் ஊரைச் சுற்றி வந்தான். குழந்தையின் கம்பீரத்தைப் பார்த்த பெருந்தச்சனுக்கு சந்தோஷமாக இருந்தது.

எட்டு எருதுகள் நெம்பித்தள்ள, பதினாறு சக்கரங்கள் கொண்ட மிகப்பெரிய வண்டி ஒன்றில் சிவலிங்கம் வைக்கப்பட்டு காளைகள் இழுக்க, யானை ஒன்றுதள்ள, சகடப் பெருவழியின் மூலம் தஞ்சைக்கு எடுத்துப் போகப் பட்டது.

அந்தப் பெருவழியின் பல இடங்களை ஆட்கள் கெட்டிப்படுத்தி செப்பனிட்டு இருந்தார்கள். மென்மையானதரை இருக்கும் இடங்களில் சிறிய பாறைத் துண்டுகளைப் போட்டு அடித்து இறக்கி விட்டுப் போனார்கள். வழியில் ஓலைக்குடிசைகள் கட்டப்பட்டு வீரர்களும் சிற்பிகளும் இளைப்பாறுவதற்கு இடங்கள் ஏற்பாடு செய்து தரப்பட்டன, சோழ தேசத்தின் காவல் வீரன் ஒருவன் அங்கு இருந்து, வந்தவர்களை உபசரித்து அனுப்பிக் கொண்டிருந்தான்.

வேகமாக நடந்தால் நான்கு நாள் பிரயாணம். சுமையோடு நடப்பதால் ஆறுநாள் ஆயிற்று. ஆனால் வழியெல்லாம் உணவு போட்டார்கள். சிவலிங்கம் வருகிறதென்று தெரிந்து அங்கங்கே தோரணம் கட்டி மலர் தூவி வரவேற்றார்கள். தாகத்திற்கு உடனடியாக பானகமும் கரும்புச்சாறும், குழந்தைகளுக்குப் பாலும் கொடுத்தார்கள். சிவலிங்கம் தஞ்சையை அடைந்தது.

தஞ்சைபுரி என்று பழங்காலத்தில் அழைக்கப் பட்ட தஞ்சை திருவக்கரை மக்களை கோலாகலத்துடன் வர வேற்றது. லிங்கத்தை சுற்றிச் சுற்றி வந்து பார்த்தது. 'பாறாங்கல்லை இத்தனை வழவழப்பாகச் செய்ய முடியுமா...எப்படிச் செய்தீர்கள்' என்று வியந்தது. தஞ்சாவூரில் ஏற்கனவே குழுமியிருந்த ஆஸ்தான சிற்பிகளும் பிரதான சிற்பிகளும், ரகசிய சிற்பியான ஆதிச்ச பெருந்தச்சனை வணங்கி வரவேற்றார்கள். தங்களைப் பற்றிய விவரம் சொன்னார்கள், தங்களுடைய கல் தேவைகளைப் பற்றி விவரித்தார்கள். தொழிலில் ஏற்படும் பிரச்சினைகளை எப்படி சமாளிப்பது என்று ஆலோசனை கேட்டுக் கொண்டார்கள்.

கோவில் கட்டுவதற்கான ஆயத்தங்களை ஆதிச்ச பெருந்தச்சன் பார்த்துவிட்டு அயர்ந்து போனார். ''இவ்வளவு பெரிய கோவிலா...விமானமே கோபுரம் என்கிற தாத்பரியமா...மனம் முழுவதும் இறைவனிடம் சரணடைந்துவிடவேண்டும் என்ற எண்ணமா...வாழ்க இராஜராஜ சோழமன்னன்'' என்று வாயார வாழ்த்தினார், சிற்பிகளைப் பாராட்டினார். உற்சாகப்படுத்தினார் ''ஒருமாதம் இருந்துவிட்டு ஊர் திரும்புகிறேன்'' என்று மன்னருக்கு செய்தி அனுப்பினார். அதற்குள் சிவலிங்கத்தையும், ஆவுடையாரையும் எடுத்துப்போய் அங்கே உட்காரவைத்து சுற்றி சுவர் எழுப்பி விட்டார். பந்தனம் செய்யப்படாத சிவலிங்கம் பிரமாண்டமாய் உள்ளே இருந்தது. மன்னர் அங்கு வந்தார்.

''ஐயா, இந்த சிவலிங்கத்திற்கு ஒரு நந்தி வேண்டும். அதையும் செய்யச்சொல்லி உத்தரவு கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் அந்த நந்தியை நான் என்னுடைய காணிக்கையாக பிரகதீஸ்வரருக்கு கொடுக்கலாமென்றிருக்கிறேன். இந்த ஆதிச்சபெருந்தச்சனின் அன்பாக இது பிரகதீஸ்வரருக்கு இருக்கட்டும் என்று நினைக்கிறேன்.



உங்களுக்கு ஏதும் ஆட்சேபமில்லையே...'' என்று ஆதிச்ச பெருந்தச்சன் மன்னரைப் பார்த்துக் கைகட்டி நின்றார்.

மன்னருக்கு மிகுந்த சந்தோஷம்.

''இதைத்தான் நான் மக்களிடம் எதிர்பார்க்கிறேன். இதைத்தான் நான் சிற்பிகளிடம் எதிர்பார்க்கிறேன். இது அரசனுக்காகக் கட்டப்படும் கோவிலல்ல. மக்களுக்காக மக்களால் கட்டப்படும் கோவில். எனவே, நீங்கள் இப்படிக் கேட்பது எனக்கு மிக்க சந்தோஷம். நான் கேட்காமலேயே நீங்கள் வழங்க முன்வந்தது எனக்கு நிறைவைக் கொடுத்தது. உங்களைத் தொடர்ந்து பலபேர் இந்தக் கோயிலுக்கு பலதும் வழங்குவார்கள் என்று உரக்கச் சொன்னார், ஆதிச்சபெருந்தச்சன் அவருக்கு மரியாதை செலுத்தி வழியனுப்பிவைத்தார்.

திருவக்கரை சிற்பிகள் ஊர் திரும்பினார்கள். நந்திக்காகக் கல் தேடத் துவங்கினார்கள்.

திருவக்கரை முழுவதும் பாறைகள் முளைத்திருக்கும் இரண்டடி உயரப் பாறை பூமியிலிருந்து வெளியே தலை நீட்டிக் கொண்டிருக்கும் இரண்டடி உயரப் பாறை தானே என்று சுற்றி மண்ணை ஈரம் செய்து தோண்டினால் தோண்டிக்கொண்டே போகவேண்டியதுதான். இருபது, இருபத்தைந்தடி ஆழம் வரையில் அந்தப் பாறை பூமியில் பதிந்திருக்கும். குறைந்த பட்சம் ஆறேழு அடி அகலமாவது இருக்கும். இருபது பேர் சேர்ந்து கயிறு எடுத்துக் கட்டினாலும் கட்டமுடியாத பாறையாக அது நிமிர்ந்து பரவியிருக்கும். கல்லின் நீளம், அகலம் மட்டுமல்ல. உறுதியும் மிகச் சிறப்பானது. பழுப்பும் சிகப்பும் ஏறிய கருங்கற்கள் பூமி முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

ஆதிச்ச பெருந்தச்சன் வெகு நேரம் திருவக்கரை பாறைக்கொல்லையில் உலவிவிட்டு, 'இந்தக்கல்' என்று கை நீட்டினார். அவர் காட்டிய இடத்தைத் தோண்ட

ஆரம்பித்தார்கள். அவர் நினைத்தது போலவே ஒற்றைப் பாறாங்கல் கிடைத்தது. நடுவே ஆணி அடித்து வளையம் மாட்டி கீழே வரிசையாய் ஓட்டை செய்து நடுவில் இரும்பாணி வைத்து ஓங்கி அடித்து, பூமியிலிருந்து அதைப் பிரித்து, பிறகு வளையத்திற்குள் கயிறு போட்டு யானை கட்டி, மண்ணிலிருந்து பாறையைப் பிடுங்கினார்கள். இழுத்துக்கொண்டு வந்து கிராமத்தின் நடுவே போட்டார்கள்.

பலவகையாகவும் அந்தப் பாறையைப் பரிசோதித்து விட்டு நல்லநாள் பார்த்து ஆதிச்ச பெருந்தச்சன் அந்தப் பாறையைச் செதுக்கத் துவங்கினார். அவருக்கு உடன் பத்து பேர்கள் அந்த வேலையில் உதவினார்கள். அந்தப் பத்துப் பேருக்கும் தலைமையாய் அவருடைய மகன் சோமதேவன் இருந்தான்.

''ஆதிச்ச பெருந்தச்சரே... இவ்வளவு பெரிய வேலையை மன்னருக்கு அன்பாய். காணிக்கையாய்க் கொடுக்க எப்படி மனம் வந்தது? நீங்கள் ஆரம்பித்துள்ள வேலை முடிய குறைந்த பட்சம் இரண்டு வருடமாவது ஆகும். இரண்டு வருடங்கள் நாம் வேலை செய்து அதை கோவிலுக்கு இனாமாகக் கொடுப்பதற்கு எவ்வளவு பெரிய மனம் வேண்டும்...ஆச்சரியமாக இருக்கிறது. ஆதிச்ச பெருந்தச்சரே'' ஊர் கேட்டது.

''எனக்கு வெகு காலமாக மக்கட்பேறு இல்லை. ஒரு முறை மனதுக்குள் சிவலிங்கம் தோன்றியது. நான் கை கூப்பி வேண்டினேன். 'உனக்கு ஏதேனும் திருப்பணி செய்கிறேன். தயவு செய்து எனக்கு ஒரு மகனைக் கொடு. சான்றோனாய் அவன் இருக்க ஆசீர்வாதம் செய்' என்று வேண்டினேன். அடுத்த வருடமே சோமதேவன் பிறந்தான்; குழந்தை கெட்டிக்காரன். சுறுசுறுப்பானவன். பாருங்கள்...பத்து பேருக்குப் பத்து விதமான வேலைகள் கொடுத்து, தானும் பாறை மீது உட்கார்ந்து கொண்டு கோடு போட்டு வேலை செய்து கொண்டிருக்கிறான்...''



எல்லாவித சிற்பக் கணக்கும் அவனுக்கு அத்துப்படியாக இருக்கிறது, இவன் இறைவன் தந்த பிள்ளை. இறைவனுக்கு நான் பதிலுக்கு ஏதேனும் தரவேண்டாமா. என்ன காணிக்கை என்று அப்போதே தீர்மானம் செய்துவிட்டேன். மன்னர் கேட்டதும் வாய் விட்டுச் சொல்லிவிட்டேன். இது பெரிய வேலைதான். இருந்தாலும் இறைவனுக்குக் காணிக்கையாகச் செய்கிறோம் என்று நினைக்கும் போது சந்தோஷமாக இருக்கிறது.''

''நல்லது. நீங்கள் சொல்வதைக் கேட்க சந்தோஷமாக இருக்கிறது. ஆனால், அப்பனும் பிள்ளையும் ஒன்றாக வேலை செய்ய வேண்டாம். கண் படும். எனவே, அவனை ஒரு நல்ல ஆசானிடம் அனுப்பி இன்னும் விவரம் கேட்டுக்கொள்ளச் சொல்லுங்கள், அவனையும் ரகசிய வேலை செய்யும் சிற்பியாக மாற்றுங்கள், கோவில் கர்ப்ப கிரகங்களில் நல்ல சிலைகள் செய்து வைப்பதற்கு அவனை பயிற்சி செய்யுங்கள். அவன் உங்களிடம் வேலை கற்றுக் கொள்வதைவிட உங்கள் நண்பர்களிடம் வேலை கற்றுக்கொண்டால் எளிதாக இருக்கும். சிற்ப வேலை கண்டித்து சொல்லித்தர வேண்டிய வேலை. உங்களால் கண்டிக்க முடியுமோ, முடியாதோ. எனவே அவனை நல்ல குருவிடம் சேர்த்துவிடுங்கள்.'' ஊர் யோசனை சொல்லியது.

ஆதிச்சபெருந்தச்சனும் சம்மதித்தார், தஞ்சையிலுள்ள சிற்பிகளுக்கு ஓலை கொடுத்து பிள்ளையை அனுப்பினார். அப்பாவுடன் தஞ்சைக்குப் போய் அங்குள்ளவர்களோடு ஒரு மாதம் தங்கி, பேசிப் பழகியிருந்ததால், சோமதேவன் தஞ்சையைத் தொட்டு ஓலையைக் காட்டியதும் 'நான், நீ' என்று போட்டி போட்டுக்கொண்டு பல பேர் அவனை தத்தெடுக்க முன்வந்தார்கள்.

ஒரு ஆஸ்தான பெருந்தச்சர் மற்றவர்களை விலக்கி ''இம்மாதிரியான பிள்ளைக்கு தனித்துப் பாடங்கள் சொல்லித் தர வேண்டும். அவன் என்னிடம் இருக்கட்டும்'' என்று அழைத்துக்கொண்டு போனார்.

தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில் கட்டுமானப் பணியின் ஒவ்வொரு அங்கத்தையும் அவர் அவனுக்குச் சொல்லிக் கொடுத்தார். வருடத்திற்கு ஒரு முறைதான் ஊருக்கு அனுப்புவார், குறிப்பாய் கார்த்திகை மாதம் தீபத்திரு விழாவுக்கு 'போய் வா' என்று அனுப்பிவைப்பார்.

## 3

சோமதேவன் இரண்டு தீபத் திருவிழாவுக்கு ஊருக்கு வந்து மூன்றாவது தீபத் திருவிழா வரப் போகிறது என்கிற மழைநாளில் அவனுக்கு திருவக்கரையிலிருந்து அழைப்பு வந்தது.

''உனக்கான வேலை முடிந்துவிட்டதப்பா. இதுவரை இந்த பரத கண்டத்திலேயே இல்லாத உயரத்தில் ஒரு நந்தி செய்திருக்கிறேன். இது நம் குலப்பெயரை விளங்க வைக்கும். உன்னை வாழ வைக்கும். இது இந்தத் தகப்பனால் முடிந்த எளிய காணிக்கை'' என்று மகனிடம் பேசினார்.

சோமதேவன் தந்தையை நமஸ்கரித்தான். செதுக்கப்பட்ட நந்தியை சுற்றி வந்து பார்த்தான். மிக அற்புதமாக இருக்கிறது என்று பாராட்டினான். அடிக்கடி வால் பக்கம் போய் உள்ளங்கை வைத்து கல்லிலிருந்து ஏதேனும் சப்தம் வருகிறதா என்று யாருக்கும் தெரியாதபடி சோதித்தான். 'நல்ல கல்லாகத்தான் படுகிறது. அப்பா தெரியாமலா தேர்ந்தெடுத்திருப்பார்' என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டான். ஆனால் நந்தியைப் பார்க்கும்போதெல்லாம் லேசாய் ஒரு சங்கடம் அவனுக்கு வந்தது.



பதினாறு சக்கர மரவண்டியை ஆதிச்ச பெருந்தச்சரே செய்தார். தஞ்சையிலிருந்து மாடுகளும் நெட்டித்தள்ள ஒன்றுக்கு இரண்டு யானைகளும் வந்தன. போர் மறவர்கள் உதவிக்கு வந்தார்கள்.

நல்ல நாள் பார்த்து நந்தி பதினாறு சக்கர வண்டியில் ஏற்றப்பட்டது. அசையாமல் இருக்க ஆப்புகள் கொடுக்கப் பட்டன. வண்டியின் பக்கவாட்டில் உள்ள கட்டைகளை அழுத்திப் பிடித்து இறுகக் கட்டினார்கள். வைக்கோல் பிரியால் நந்தியின் உடம்பு முழுவதும் சுற்றினார்கள். முன்னே சிறுபடை போக, ஊர் மக்கள் உடன் போக நந்தி திருவக்கரை தாண்டி சங்கராபரணி ஆற்றுக் கரைப்பக்கம் வந்துநின்றது.

அது ஐப்பசி மாதம். ஆனால், கனமழை இன்னும் துவங்கவில்லை. வானம் மப்பும் மந்தாரமாக இருந்தது. சங்கராபரணியில் முழங்காலளவு நீர் போய்க் கொண்டிருந்தது. இருநூறு பேர் முழுபலத்தோடு காளைகளை அடித்து விரட்டி, யானையை அண்டக் கொடுக்கச் செய்து, நந்தியை மெல்ல மெல்ல நீருக்குள் இறக்கி நடு ஆற்றுக்கு கொண்டுபோனார்கள்.

திடீரென்று வண்டியின் முன்பக்க அச்சு முறிந்தது. பாறைக்கு நடுவே சக்கரம் சிக்கிக்கொள்ள, யானை முட்டித்தள்ள, அந்த மோதல் தாங்காமல் பளிச்சென்று முன்பக்கம் உட்கார்ந்து கொண்டது, பெரிய கட்டைகளை அண்டக்கொடுத்து தூக்கினார்கள்; வேறு ஒரு சக்கரம் செய்ய வேண்டுமென்று ஒட்டு மொத்தமாய் சக்கரம் செய்வதில் பலபேர் இறங்கினார்கள்.

ஒருநாள் முழுவதும் நீரிலேயே நந்தி இருக்க, வேறு சக்கரம் செய்து மாட்டினார்கள். வண்டியின் பாதையில் தான் நீர் ஓடிக்கொண்டிருந்தது. சோமதேவன் குடம் குடமாய் நீரெடுத்து நந்தியின் மீது ஊற்றிக்கொண்டிருந்தான். நந்தி உடம்பு முழுவதும் நனையும் வரை இடைவிடாது பலமுறை பல குடங்கள் நீர் ஊற்றினான்.

''எதற்கு தம்பி நீரூற்றுகிறாய்? சங்கராபரணி ஆற்றின் புனித நீரா நந்தியின் தலையில் ஊற்றி சுத்தப்படுத்துகிறாயா'' என்று ஊர் மக்கள் கேட்டார்கள்.

''ஆமாம்'' என்று கண் சிமிட்டியபடி சோமதேவன் பதில் சொன்னான். சுற்றிச் சுற்றி வந்து நந்தியை ஆராய்ந்தான்.

சக்கரம் மாட்டியதும் ஊர்வலம் மறுபடியும் புறப்பட்டது. இருநூறு பேரும் முன்னே போய் இழுக்க யானைகள் முட்டுக் கொடுத்துத் தூக்க தஞ்சை சகடப் பெருவழிக்கு நந்தி எம்பெருமானார் கரையேறினார்.

இனி குடந்தையின் எல்லை வரை கவலையில்லை. பெரிய ஆறு எதுவும் குறுக்கிடவில்லை. கொள்ளிடத்திலும், காவிரியிலும் பாலம் கட்டியிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் ஆறு யானைகள் போகும்படியான உறுதியான மரப்பாலம் கட்டியிருக்கிறார்கள். அந்த இடத்தை ஆழப்படுத்தி, நீர் எப்போதும் இருக்கும்படியாய் செய்து பாலத்தை மிதக்கும்படி வைத்திருக்கிறார்கள். மழை நாளில் பாலம் இன்னும் உயரும். நீர் இல்லை என்றால் தாழும்.

சகடப் பெருவழிக்குள் நந்தி எம்பெருமானார் மக்கள் புடைசூழ நுழைய நல்ல வெயில் அடிக்கத் துவங்கியது. எல்லோரும் உணவு எடுத்துக்கொள்ள நந்தி எம்பெருமானார் வெயிலில் உலரத் துவங்கினார்.



சோமதேவன் நந்தியைச் சுற்றிவந்தான். திடீரென்று திகைத்தான். அப்பாவை நோக்கி ஓடினான். ''தயவு செய்து சற்று வருகிறீர்களா'' என்று பணிவாகக் கேட்டான். சாப்பிட்டுக் கொண்டிருந்த அப்பா. கை உதறி 'எதற்குக் கூப்பிடுகிறான்' என்று யோசித்துப் பின் தொடர்ந்தார்.

''இந்த இடத்தைப் பாருங்கள்'' நந்தி எம்பெருமானின் வால்பக்கத்தைத் தொட்டுக் காட்டினான்.

''என்ன சொல்கிறாய் .சோமதேவா''

''எல்லா இடமும் வெயில் பட்டு உலர்ந்து விட்டது. இந்த இடம் மட்டும் உலரவே இல்லை. ஈரம் அப்படியே இருக்கிறது, பாருங்கள். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''புரியவில்லையே சோமதேவா நீ என்ன நினைக்கிறாய்? அளவுகள் சரியாகத்தானே இருக்கின்றன''

''இல்லை சிற்ப வேலையின் துல்லியத்தை நான் மறுக்கவே இல்லை. ஆனால் பாறை தேர்ந்தெடுத்ததில் தவறு நேர்ந்துவிட்டது.''

''என்ன உளறுகிறாய் சோமதேவா''

''நீங்கள் ஒரு தவறான பாறையைத் தேர்ந்தெடுத்து விட்டீர்கள்''

''எப்படிச் சொல்கிறாய்...''

''ஈரம் உலராத இடம் தேரை இருக்கிற இடம்''

''இல்லை. இந்த இடத்தில் மறுபடியும் யாரேனும் நீர் கொட்டியிருப்பார்கள். அல்லது இந்த இடம் நிழலில் இருந்திருக்கும் ஒரு ஒற்றைப் பனையோ, அல்லது புளிய மரத்தின் ஒரு கிளையோ நேரடி வெயிலை நந்திக்கு கொடுக்காமல் போயிருக்கும். வெயில்பட்ட இடங்கள்

காய்ந்து வெயில்படாத இந்த இடம் மட்டும் ஈரமாக இருக்கலாம்.''

''இல்லை ஐயா. கை வைத்துப் பார்க்கும்போது உள்ளே உயிர்த்துடிப்பு தெரிந்தது.''

''எல்லாம் தெரிந்துவிட்டதா சோமதேவா உனக்கு''- பெருந்தச்சன் கோபமாகக் கேட்டார்.

''இல்லை அப்பா, இது தவறான கல். இந்தக் கல்லுக்குள் நிச்சயம் ஒரு தேரை இருக்கிறது. உள்ளுக்குள் ஒரு உயிர் இருக்க, அதில் நாம் சிலை செய்து வைத்தால் கடைசிவரை அந்தத்தேரை வெளிவர முடியாது போகும். அப்படிப்பட்ட தவறான ஒரு கல்லை இவ்வளவு பெரிய விஷயத்துக்குத் தேர்ந்தெடுத்து விட்டீர்களே என்று வேதனைப்படுகிறேன்.''

''மறுபடி சொல்கிறேன் சோமதேவா அடக்கமாக இரு. உன்னைவிட நான் முப்பது வருடங்கள் மூத்தவன். எத்தனையோ சிற்பங்கள் செய்து பழக்கப்பட்டவன். நீ இரண்டு வருடமாகத்தான் வேலை கற்றுக்கொள்கிறாய். அதிகம் பேசாதே சோமதேவா நல்லவேளை யாரும் இல்லாது தனியாக என்னைக் கூட்பிட்டாய். அத்தனை பேருக்கு நடுவே நீ இதைச் சொல்லியிருந்தால் உனக்கு அவமானமாகப் போயிருக்கும்.''

''அப்பா, நீங்கள் தவறாகப் பேசுகிறீர்கள். எனக்கு எந்த அவமானமும் நேர்ந்திருக்காது. மாறாக, உங்களுக்கு அவமானம் நேர்ந்திருக்கும். 'இத்தனை பெரிய வேலை செய்துவிட்டு, ஒரு தவறான கல்லை தேர்ந்தெடுத்து விட்டீர்களே' என்று சிற்பிகள் உங்களை குறை சொல்லியிருப்பார்கள். தலையிலடித்துக் கொள்வார்கள். நாற்பத்தேழு வயதில் மிகப்பெரிய அவமானம், உங்களை வந்து சேர்ந்துவிட்டதப்பா''



''சோமதேவா, நீ அதிக பிரசங்கி என்பதற்கு இது ஒரு அடையாளம். தஞ்சைக்கு போய் கட்டிடவேலை செய்ததால் உன்னைவிட மிகப்பெரிய ஆள் வேறு எவரும் இல்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா முட்டாளே, இதில் தேரையும் இல்லை. பாம்பும் இல்லை. இது நல்ல கல். எந்தக்குறையும் இல்லாத கல்.''

''இல்லை அப்பா. இது மிகப்பெரிய குறையுள்ள கல். இந்தக் கல் நிச்சயம் தெறித்துவிடும். நந்தி மூளியாகும்.''

''சோமதேவா அளவுக்கதிகமாகப் பேசுகிறாய்''

கோபப்பட்டு ஆதிச்ச பெருந்தச்சன் குரல் உயர்த்தினார். மற்றவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். கையலம்பிக் கொண்டு அவர்களுக்கு அருகில் வந்தார்கள்.

''என்ன சொல்கிறான் உன் பிள்ளை'' ஒரு கிழவர் ஆதிச்ச பெருந்தச்சனை நோக்கிக் கேட்டார்.

''இந்தக் கல் குறையுள்ளது என்று சொல்கிறான், முட்டாள்.''

''அப்படியா என்ன குறை சோமதேவா...''

''இது தேரை இருக்கிற கல்''

''என்னது?''—ஊர் திகைத்தது.

''ஒரு சிற்பத்தில் தேரையிருப்பின், ஏதேனும் ஒரு நேரத்தில் அந்தத் தேரையின் உந்துதலால் பாறை வெடித்து சிற்பம் மூளியாகும். எனவே, சிற்பிகள் எந்தக் காரணம் கொண்டும் தேரையிருக்கிற கல்லில் சிற்பம் செதுக்கமாட்டார்கள். மேலும் ஒரு உயிர் உள்ளே இருப்பது தெரிந்தபோது, சுற்றி உளியால் அடிப்பது அந்த உயிருக்கு மிகுந்த வலியையும் வேதனையையும் தரக் கூடும். எனவே அந்தப் பாவத்தை அவர்கள் செய்ய மாட்டார்கள். கல்லில் தேரையிருக்கிறதென்பதை, கை

வைத்துப் பார்த்து நல்ல சிற்பியால் கண்டுபிடித்துவிட முடியும். எப்படி ஆதிச்சபெருந்தச்சன் இவ்வளவு பெரிய தவறைச் செய்தாரென்று தெரியவில்லை. சோமதேவன் சொல்கிற ஈரச்சாட்சி சரியாகத்தான் இருக்கும் மறுபடி ஒன்றுசெய்வோம். மீண்டும் நீர்கொண்டு வந்து நந்தியை முழுவதும் நனைப்போம். ஆறு அருகே தானே இருக்கிறது''—பெரியவர் சொன்னார்.

ஜனங்கள் வரிசையானார்கள். குடத்தை மாற்றி மாற்றி அனுப்பினார்கள். நீர் மொண்டார்கள். நீர்குடம் மறுபடியும் நந்தி எம்பெருமானிடம் வந்து சேர்ந்தது, தலையில் நீர் கவிழ்த்தார்கள். உடம்பு முழுவதும் நீரால் நனைத்தார்கள். காத்திருந்தார்கள்.

மூன்றுமணி நேரம் கழித்து, நந்தியின் எல்லாப் பக்கமும் உலர்ந்துபோயிற்று. அந்த ஒரு இடம் மட்டும் நீர் சொட்டுகின்ற விதத்திலேயே இருந்தது.

''பாருங்கள் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. தேரையிருக்கிற இடத்தில் நீர் உலரா்து. இது தேரை இருக்கிற இடம் என்று எனக்கு மிகச்சுத்தமாகத் தெரிகிறது. அதைத்தவிர நல்ல சிற்பிகள் கை வைத்துப் பார்த்தால் உள்ளங்கையில் ஒரு துடிப்பு ஏற்படும். தேரையின் சுவாசம் நம் கைக்குத் தெரியும். என் கைக்கு நிச்சயம் தெரிகிறது. இதோ இந்த இடத்தில் தேரை இருக்கிறது'' என்று ஒரு இடத்தைத் தொட்டுக் காண்பித்தான். மற்ற சிற்பிகள் அந்த இடத்தைத் தொட்டுப் பார்த்தார்கள். 'இல்லையே, எங்களுக்குத் தெரியவில்லையே' என்றார்கள்.

ஆதிச்ச பெருந்தச்சன் கோபமானார்,

''இப்போது இந்த இடத்தை அடித்து உடைக்கிறேன். இங்கு தேரை இல்லையென்றால் என்ன செய்வாய்.''

''சிற்பம் செய்வதையே விட்டு விடுகிறேன்.'' சோமதேவன் பளிச்சென்று சொன்னான்.



அப்பனுக்கும் பிள்ளைக்கும் இடையே ஏற்பட்ட சண்டையை ஊர் வியப்போடு பார்த்தது.

''தேரை இருந்தால் என்ன செய்வீர்கள் தந்தையே''-சோமதேவன் பதிலுக்குக் கேட்டான்.

ஆதிச்சபெருந்தச்சன் வாய் திறந்தார்.

''தயவுசெய்து தொழிலையே விட்டு விடுகிறேன் என்று சொல்லாதீர்கள்''

''பிறகு...?''

''இன்று முதல் நீங்கள் செய்கிற எல்லா வேலையும் இறைப்பணியாகவே இருக்க வேண்டும். அந்த இறைப் பணிக்கு நீங்கள் கூலியும் வாங்கக்கூடாது. உங்கள் கடைசி மூச்சுவரை, சிற்பக்கலை என்ற விஷயத்தை நீங்கள் உலகத்துக்கு ஒரு காசு கூட வாங்காமல் அள்ளி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இது என் வேண்டுகோள்'' பணிவாகப் பேசினான்.

''தெளிவாக இருக்கிறது ஐயா போட்டி.தேரை இருக்கிறதா இல்லையா என்பது தட்டிப்பார்த்தால் தெரிந்துவிடும்.''

மெல்லிய சுத்தியால் தட்டினார்கள், காதுக் கொடுத்துக் கேட்டார்கள். நல்ல கல்லைத் தட்டினால் நாதம் வெகுதூரம் கேட்கும். ஆனால் சோமதேவன் காட்டிய இடத்தில் தட்டுகிறபோது நாதம் சுருக்கமாய் இருந்தது, மற்ற இடங்களைத் தட்டுகிறபோது நாதம் நீளமாய் இருந்தது. ''அப்படியானால் அந்த இடத்தில் நாதம் தடைபடுகிறது என்று பொருள். ஆணி வைத்து நோண்டிப் பார்க்கலாமா?'' என்று பேசிக் கொண்டார்கள். நேரிடையாய் தேரையின் முதுகை அது தாக்கும் என்பதால் வேறொரு பக்கமாக ஓட்டை போடலாம் என்று தீர்மானமாகிறது. ஆணி வைத்து மெல்லத்தட்டி உள்ளே

இறக்கினார்கள். மிகக்கவனமாய் ஒரே ஒரு ஓட்டை
போடலாம் என்று முயற்சித்தார்கள். மெல்ல இறங்கிக்
கொண்டிருந்த ஆணி பனக்சென்று எளிதாய் உள்ளே
இறங்கியது, அதாவது உள்ளே நான்கு உழக்கு நெல்
குவியும் அளவுக்கு ஒரு இடைவெளி இருக்கிறது. பாறை
யில்லாத உள் ஓட்டை இருக்கிறது என்பது புரிந்து
விட்டது.

''ஆணி சரக்கென்று இறங்குகிறது ஐயா'' எல்லோ
ரும் கவலையாகப் பேசினார்கள். என்ன செய்வதென்று
தெரியாமல் ஆணியையே வெறித்து வேடிக்கை பார்த்
தார்கள்.

ஆதிச்ச பெருந்தச்சன் பெரிய சம்மட்டி எடுத்தார்.
குத்திக்கொண்டிருக்கிற ஆணி மீது ஓங்கி அடித்தார்.
பளிச்சென்று பாறை பிளந்து கீழே விழுந்தது. உள்ளி
ருந்து ஒரு தேரை குதித்து குதித்து மணல் மீது ஓடிற்று.
தேரை இருந்த இடம் தெளிவாகத் தெரிந்தது. ஆதிச்ச
பெருந்தச்சன் வாய்விட்டு அலறினார்.

அவர் ஓடிப்போய் வண்டிக்கு அருகே நின்று வண்டிக்
காளைகளைப் பிரித்துவிட்டார். அவர் மட்டும் ஒற்றை
ஆளாய் கம்பு கொடுத்து வண்டியை நெட்டித் தூக்கி
னார். சற்று மேலே தூக்க நந்தி சரிந்து புரண்டு மண்
ணில் விழுந்தது. விழுந்த நேரத்தில் முதுகிலிருந்து பின்
பக்கம் வரை பெரிய விரிசலாய் விட்டு உடைந்தது.

ஊர்மக்கள் அலறித் துடித்தார்கள். ஆனால் அவர்
களால் எதுவும் செய்ய முடியவில்லை.

''ஆதி, 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா' என்று
சொல்வார்கள். உனக்குப் பிறந்தது உன்னைவிட வலி
வுள்ள புலியாக இருக்கிறது. எனவே நீ உன் தோல்
வியை ஒப்புக்கொண்டு, உன் மகன் சொன்னது போல
உன் தொழிலை நிறுத்தாமல், இனி செய்கிற எல்லாப்



பணியும் இறைவனுக்கான பணியாகவே செய்துவிடு.
அவன் காரணமின்றிச் சொல்லவில்லை, பல மூர்த்தங்
களை தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில் சுற்றி செய்
வதற்கு மன்னர் திட்டமிட்டிருக்கிறார். வரைப்படங்
கள் வைத்திருக்கிறார். நீ அங்கு போய் ஒவ்வொரு
கோஷ்டத்திலும் நல்லபடியாய் மூர்த்தங்கள் வைப்பதற்கு
ஏற்பாடு செய். பிரகதீஸ்வரர் கோவிலோடு உன்னைப்
பிணைந்துக் கொள். நீ ஆயுசு முழுவதும் செய்வதற்கு
பிரகதீஸ்வரர் கோவிலில் வேலை இருக்கும். எனவே
உன் சிற்பக்கலை நிற்கவே நிற்காது. அதே சமயம் அதை
இறைத்தொண்டாக மாற்றிவிடு. அதற்கு கூலி, உனக்கு
அடுத்த ஜென்மத்தில் இறைவன் கொடுப்பான். உன்
மகன் வேலை செய்து சம்பாதித்து உனக்கு சோறு போடு
வான், எனவே நீ உன்னை பிரகதீஸ்வரருக்கு அர்ப்
பணம் செய்து கொள். அங்கேயே குடியிருந்து விடு''
என்று ஊரார் கூறினர்.

தன் மகனை நோக்கி ஆதிச்ச பெருந்தச்சன் கை கூப்
பினார். பையன் ஓடிப்போய் அப்பாவைத் தழுவிக்
கொண்டான். நெற்றியில் முத்தமிட்டான்.

''இது கடவுள் செய்த லீலையப்பா. 'திருவக்கரை
யில் உனக்கு என்ன வேலை? நான் இருக்கும் இடத்
திற்கு வந்து வேலை செய்' என்று பிரகதீஸ்வரர் உங்
களை அழைத்துக் கொள்கிறார். எனவே, வீடு பெயர்ந்து
நாம் தஞ்சைக்குப் போவோம். அங்கு அற்புதமான
வாழ்க்கை காத்திருக்கிறது'' என்று சொன்னான்.

அவர்கள் திருவக்கரை வந்தார்கள். வீட்டிலுள்ள
எல்லா சாமான்களையும் வண்டியில் கட்டிக் கொண்டார்
கள். திருவக்கரை காளியிடம் விடைபெற்றுக் கொண்
டார்கள். சகடப் பெருவழியில் நடந்தார்கள். போகும்
போது உருண்டு கிடக்கிற நந்தியைப் பார்த்தார்கள்.

''இந்தப் பாறை தவறானதாக இருக்கலாம். இந்தச்
சிற்பம் பழுதுடையதாக இருக்கலாம். ஆனாலும் சோம

தேவா, இந்த நந்தி பல ஆயிரம் வருடங்கள், சந்திர
சூரியர்கள் இருக்கும் வரை இங்குதான் இருக்கும். அப்ப
னுக்கும், பிள்ளைக்கும் நடந்த போட்டியை கதையாகச்
சொல்லிக்கொண்டிருக்கும். உன் பெயரையும், என் பெய
ரையும் இந்த ஊர் வழிமொழிந்து கொண்டிருக்கும்.
எத்தனை காலமானாலும் திருவக்கரை மாறப் போவ
தில்லை. அது இப்படியே பாறைக் கொல்லையாகத்தான்
இருக்கப் போகிறது.'' ஆதிச்ச பெருந்தச்சன் சொல்லி
விட்டு தஞ்சை நோக்கி சகடப் பெருவழியில் நடந்தார்.

அந்த நந்தி வெயிலிலும், மழையிலும், காற்றிலும் பனியி
லும் இன்றுவலர அப்படியே மல்லாந்து கிடக்கிறது. தமிழ்
நாட்டு சிற்பக் கலைஞர்களின் பெருமையை சொல்லிக்
கொண்டு இருக்கிறது. அப்பாவுக்கும், பிள்ளைக்கும்
நடந்த போட்டியைக் கதையாய்ப் பரப்பிக் கொண்டிருக்
கிறது. அந்த நந்தியை இத்தனை வருடங்களுக்குப் பிறகும்
யாரும் நிமிர்த்தவில்லை. ஒட்டிவைக்கவில்லை. வெறுமே
ஒரு ஊரின் ஓரத்தில் ஒரு சாராயக்கடை அருகே காவல்
தெய்வமாய் நின்றிருக்கிறது. ஜனங்கள் அதன் முகத்திற்கு
மஞ்சள் தடவி நெற்றியில் பெரிய குங்குமத் திலகமிட்டு
'எங்கள் காவல் தெய்வம்' என்று கும்பிட்டுக் கொண்டிருக்
கிறார்கள். ஜுரம் வந்தால் போக்கும் என்று வேண்டிக்
கொள்கிறார்கள். உடல் நலனைக் காக்கும் என்று பிரார்த்
தித்துக் கொள்கிறார்கள்.

சத்தியத்தை சுமந்த எதுவும் நீண்ட நாள் இருக்கும்,
எவரையும் காவல் காக்கும். அந்த நந்தி ஒரு சத்திய சொரு
பம். தன்னை உலகுக்கு அர்ப்பணித்துக் கொண்ட ஒரு
மனிதரின் கைவண்ணம். ஆசை இருந்தால், இப்போதும்
கூட திருவக்கரையிலிருந்து பாண்டிச்சேரி போகும் வழியில்
தமிழ்நாடு-பாண்டிச்சேரி எல்லையில் அந்த நந்தி புரண்டு
கிடப்பதைப் பார்க்கலாம். சோழ சிற்பிகளான ஆதிச்ச
பெருந்தச்சனுக்கும், சோமதேவனுக்கும் நன்றி சொல்லிவிட்டு
நீங்கள் அதைச் சுற்றி வரலாம்.

—முற்றும்—